**O.S. 3/2018, 26.02.2021, 02.40 pm - 03.20 pm**

**வா.சா.2, நாராயணன், த/பெ.கந்தசாமி கவுண்டர்**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

வாதி எனக்கு நண்பரா என்றால் தெரிந்தவர் பழக்கம். எத்தனை வருடமாக தெரியும் என்றால் சுமார் 10 ஆண்டுகளாக தெரியும். எந்த வகையில் பழக்கம் என்றால் அவர் நிலத்திற்கு கூலி வேலைக்கு போவேன் அதனால் பழக்கம். எனக்கு நிலம் உள்ளதா என்றால் நிலம் உள்ளது விவசாய வேலை செய்கிறேன். எனக்கு சுமார் 1 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. என் சொத்து சம்மந்தமாக வழக்கு இருந்ததா என்றால் வழக்கு இருந்தது தீர்ப்பாகிவிட்டது. நான் சுமார் 10 வழக்கு நடத்திருந்தேனா என்றால் 7 வருடங்களாக நடத்தினேன். எந்த நீதிமன்றத்தில் என்றால் இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், சார்பு நீதிமன்றத்திலும் நடத்தினேன். வாதியின் வழக்கறிஞர் தான் என்னுடைய வழக்கறிஞரா என்றால் அவர் வேறு. என்னுடைய வழக்கிலும் ராமன் சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் அளித்துள்ளார். இன்று சாட்சியம் அளிக்க என்னை யார் அழைத்தது என்றால் வாதி தான். எனக்கும், ராமன் உடன்பிறந்த சகோதரர்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று சொன்னால் சரிதான். ராமன் வாணியம்பாடி டவுனில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். வாதி மின்சார வாரியத்தில் பணி செய்கிறார் என்று சொன்னால் சரிதான். வாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 பெண், 1 ஆண் ஆகும். நான் ராமன் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். கிராமத்தில் பஞ்சாயத்து நடத்தும்பொழுது அதில் கலந்துகொள்வதோ அல்லது பஞ்சாயத்தில் ஈடுபடுவதோ உண்டா என்றால் இல்லை. இந்த வழக்கு வாதி எத்தனை நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் மூன்று நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். வாதி தாக்கல் செய்த வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். என் பிள்ளைகளின் பிறப்பு தேதி எனக்கு கவனமில்லை. 14.07.2000 என முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. தானசெட்டில்மெண்ட் பத்திர எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்றால் நான் பார்க்கவில்லை. அந்த ஆவணத்தை நான் எப்பொழுது பார்த்தேன் என்றால் 10 வருடத்திற்கு முன்பு நகலை படித்து பார்த்தேன். பிரமாண வாக்குமூலத்தில் ஓடு வீடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த வீடு யார் கட்டியது என்று தெரியுமா என்றால் வாதி கட்டியது. அந்த ஆவணத்தில் ஓட்டு வீடு பற்றி உள்ளதா என்றால் உள்ளது. வீட்டின் நீள, அகலம், திசைகள், கதவு எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. ஓடு வீடு எப்பொழுது கட்டப்பட்டது என்றால் 03.07.2000 தேதியில் கட்டப்பட்டது. ஒரே ஒரு வீடு தான் உள்ளது என்றால் மெத்தை வீடும் ஒன்று உள்ளது. அந்த வீடும் 03.07.2000 தேதியிலே கட்டப்பட்டது. வாதி எத்தனை வருடமாக நியுடவுனில் குடியிருக்கிறார் என்றால் ஞாபகமில்லை, ஆனால் அவர் ஊரில் இருக்கும்பொழுது பழக்கம். வேறு பத்திரங்கள் வாதி பெயரில் ஏதேனும் உள்ளதா என்றால் நிலத்து பத்திரம் உள்ளது, ஆனால் என்ன என்று குறிப்பிட்டு தெரியாது. வேறு பத்திரத்தின்

வருடங்கள் ஞாபகமில்லை. வாதிக்கும், அவருடைய சகோதரர்களுக்கு இடையே வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எந்த வருடம் என்றால் சுமாராக நான்கு வருடத்திற்கு முன்பிருக்கும். வாய்மொழி பாகத்தின் மூலம் வாதிக்கு எவ்வளவு சொத்து வந்தது என்று தெரியுமா என்றால் தெரியும் 3 ஏக்கரா நிலம், தாவா சொத்து, 69 தானசெட்டில்மெண்ட் நிலம் ஆகும். நான் முன்னின்று பாகம் செய்துகொடுத்தேனா என்றால் நான் செல்லவில்லை. யார் சொல்லி வாய்மொழி மூலம் வாதிக்கு பாகம் வந்தது என்று தெரியும் என்றால் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை படித்து பார்த்து தெரிந்துகொண்டேன். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் வாய்மொழி பாகத்தை பற்றி குறிப்பிட்டுள்ளது என்றும், அதன் மூலம் தான் தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம். நான் கூறும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று சொன்னால் ஞாபகமில்லை. வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்க இதற்கு முன்பு நான் வந்துள்ளேனா என்றால் இல்லை. தரப்பினர்களுக்கு இடையே இதற்கு முன்பு ஏதேனும் வழக்கு உள்ளதா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் மனைவி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, ஆசிரியராக உள்ளார். அவர் எந்த வருடம் பணியில் சேர்ந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது சுமார் 10 வருடம் இருக்கும். வாதியின் எந்தெந்த பள்ளியில் ஆசிரியராக இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி சொல்லி தெரியுமா என்றால் எனக்கே தெரியும் மூன்று இடத்தில் பணி செய்துள்ளார். அவ்வாறு பணி செய்யும் இடத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் செல்லவில்லை, அவர்கள் சொல்லி தெரியும். புதூர் நாடு பள்ளியில் எப்பொழுது போய் சேர்ந்தார்கள் என்றால் குறிப்பிட்டு வருடம் தெரியாது, நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பிருக்கும். நான் வருவாய்துறை அலுவலகத்திலோ, கிராம நிர்வாக அலுவலகத்திலோ நான் சென்று தாவா சொத்து ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, சர்வே எண்.133/1எ1-ல் 69 செண்ட், மற்ற நிலங்களுக்கு எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சர்வே எண்ணை எதை பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் பேப்பரை பார்த்து கொண்டேன், அந்த பேப்பரை ராமனின் மனைவி கொடுத்தார்கள். எத்தனை வருடத்திற்கு முன்பு தானசெட்டில்மெண்டை பார்த்தேன் என்றால் 10 வருடத்திற்கு முன்பு பார்த்து தெரிந்துகொண்டேன். சார் ஆட்சியர் அலுவலகம் எங்குள்ளது என்று தெரியுமா என்றால் இரண்டு வருடத்திற்கு முன்பு திருப்பத்தூரில் இருந்தது, நான் சென்றுள்ளேன். என் சொத்து சம்மந்தமாகவும் மனுகொடுக்க சார் ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். வாதியுடன் நான் அவருடைய சொத்து சம்மந்தமாக சென்றேனா என்றால் இல்லை. சார் ஆட்சியர் உத்தரவை நான் படித்து பார்த்தேனா என்றால் தானசெட்டில்மெண்டை படித்து பார்த்துள்ளேன். ராமனின் மெத்தை வீடு கட்டுவதற்கான வீட்டு வேலைக்கு நான் சென்றுள்ளேனா என்றால் வீட்டு வேலைக்கு செல்லவில்லை, நிலத்து வேலைக்கு சென்றுள்ளேன். மெத்தை வீட்டில் மகேஸ்வரியும், அவருடைய கணவரும் குடியிருக்கிறாரா என்றால் தற்பொழுது குடியிருக்கிறார்கள். சுமார் நான்கு வருடங்களாக குடியிருந்து வருகிறார். எந்த ஓதாவில் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி தெரியாது, பஞ்சாயத்து ஏதும் நடக்கவில்லை, நீதிமன்றத்தில் வழக்குள்ளது, அது பற்றி தெரியும். அதற்கு முன்பு யார் குடியிருந்தார்கள்

என்றால் ராமன் குடியிருந்தார், வேலையின் நிமித்தமாக நியுடவுனுக்கு வந்துவிட்டார். அவர் நியுடவுனுக்கு வந்து சுமார் 10 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதிக்கு ஆதார், குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை எந்த முகவரியில் உள்ளது என்று தெரியுமா என்றால் வள்ளிப்பட்டு கிராமத்தில் உள்ளது. மேற்படி ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எப்பொழுது பார்த்தேன் என்றால் குறிப்பிட்டு வருடம், நாள் தெரியவில்லை. மின் இணைப்பிற்கு மனு யார் கொடுத்தார்கள் என்றால் மகேஸ்வரி, எப்பொழுது என்றால் சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு கொடுத்தார்கள். அதற்கு ஆட்சேபனை வாதி தெரிவித்தார். மேற்படி மனு மற்றும் ஆட்சேபனையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. அந்த ஆட்சேபனையிலும், விண்ணப்பத்திலும் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் ராமன், மகேஸ்வரி மற்றும் அவர் கணவர் ஏமாற்றி பெற்ற சொத்தை கேட்டு போட்டுள்ளார், எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் என்னுடைய முதல் விசாரணையை பார்த்து தெரிந்துகொண்டேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் யார் கூறியது என்று தெரியாது, வழக்கறிஞர் தயார் செய்ததில் கையொப்பம் செய்தேன். வழக்கு சொத்தும், வாதியின் குடும்ப சொத்தும் இன்று வரை பாகப்பிரிவினை ஆகவில்லை என்றும், கூட்டு குடும்ப சொத்தாக தான் உள்ளது என்றால் சரிதான். கூட்டு குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து முதலில் தகப்பனார் பெயரில் தான் பட்டா இருந்தது என்று சொன்னால் சரிதான். கூட்டு குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதி வைக்க உரிமை கிடையாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி வீடு கட்டினார் என்று கூறுவது தவறு என்றும், மகேஸ்வரி மற்றும் அவரின் கணவர் தான் வீடு கட்டினார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.